# ஆயுதப்படையினர் சுட்டதில்

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 17 ஜ. அவ்வல் 4 இதழ் 17

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1 3 82

# இளைஞர் பலி!

## றைபிள்கள், துவக்குகள் சன்னங்கள் மீட்கப்பட்டன!

(வவனியா)

வவனியாவில் ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 24 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைத்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே இச்சம்பவம் நடந்துள்ளது. இறந்தவரின் இல்லத்தைச் சோதனையிட்ட படையினர் றைபிள்கள் 10 துவக்குகள், சன்னங்கள், வெற்புக்கள் முதலியவற்றை அங்கிருந்து கைப்பற்றியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆயுதப்படையினர் மீது இளைஞர் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததைத் தொடர்ந்து, ஆயுதப்படையினர் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவனியா தச்சன்புலத்தில் பொலிஸாரும இரா...

(8ம் பக்கம் பார்க்க)

---

★ யாழ். பொதுசன நூலகக் கட்டடம்:

# லண்டன் தமிழ்மக்களிடம் 'அமிர்' நிதி கோருவார்

## ஒரு கோடி ரூபா நஷ்டஈடும் விரைவில் கிடைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

லண்டனில் பிளவுபட் ...ருக்கும் தமிழ் மக்க ...ளிடம்; காவல்படையின ...ரால் எரித்து நாசமாக் ...கப்பட்ட யாழ்.பொதுசன நூல்நிலையத்தை கட்டி ...ழுப்புவதற்கு நேரில் ...நிதி உதவி கோரப்போ ...வதாக, எதிர்க்கட்சித் முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். மாநகராட்சி மன்ற நூலகவார இறுதி நாளை யொட்டி நடத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

யாழ் நகர மண்டபத்தில் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் இக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது.

திரு. கே. ஆர். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மன்றக்கீதம் பாடினார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது: இந்நூலகத்துக்கு காவல் படையினர் செய்த அநாகரிகச் செயலுக்குப் பொறுப்பேற்க வேண்டிய அரசு, ஒருகோடி ரூபா நஷ்டஈடாக ஒதுக்கியுள்ளது. நான் நாளை மாலை லண்டனுக்கு செல்லவேண்டியிருப்பதால், நஷ்டஈடாக ஒதுக்கப்பட்ட இப்பணத்தை கூடிய விரைவில் வழங்குமாறு, நாளைக்காலை ஜனாதிபதியை சந்தித்து வற்புறுத்துவேன்

''ஆட்சியாளரின் காவல் படையினரால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட அநாகரிகச் செயல் இதுவாகும். இந்த நூலகம் முன்பிருந்ததைவிட சோபையுடன் கட்டியெழுப்ப வேண்டியபெரும் பொறுப்பு தமிழினத்தைச் சேர்ந்தது.

சாதி சமய பேதமின்றி இந் நூல்நிலையத்துக்கு தவக்கடமைப்பட்டிருக்கிறோம், இதற்கு சிறப்பாக பாடசாலை மாணவர்கள் நிதிதிரட்டிவருகிறார்கள், அவர்களுக்கு தொடர்ந்து வாரிவழங்குங்கள்'

எனது மனைவி அண்மையில் தமிழ்நாட்டுக்குச் சென்ற போது, ஏராளமான நூல்களை தாங்கள் சேகரித்துவைத்திருப்பதாகவும், அவற்றை மாநகர முதல்வரையும் என்னையும் வந்து பொறுப்பேற்குமாறும் தமிழக அரசு அழைப்புவிடுத்துள்ளது இந்நூல்கள் கிடைப்பதற்கு திரு. பி. நெடுமாறனின் முயற்சியும், அதனைத்தொடர்ந்துதமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளும், தமிழக முதல்வரும் தான் காரணம்.

''உலக தமிழினத்தின் பெருமைக்காக இதைக்கட்டி எழுப்ப வேண்டும்''

மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் திரு. து. சாந்திகுமார், திரு. யோ. அ. செல்வநாயகம், ஜனாப் ற. மு. இமாம் ஆகியோரும்உரையாற்றினர்.

நேற்று நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் சென்ற இளைஞர்கள் நூலக கொடிவிற்பனை மூலம் சேர்ந்த நிதியாகிய 1,168 ரூபா சபையில் கையளிக்கப் பட்டது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வீ, கே. சிவஞானம் நன்றிதெரிவித்துப்பேசினார்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (மா)

### கச்சதீவில் 3 இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

கச்சதீவில் நேற்றுமுன்தினம் 3 இளைஞர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாங்கள் இந்தியாவிலிருந்து வந்ததாகவும் தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் தலைவர்களுடன் தங்களுக்குத் தொடர்பு உள்ளதாகவும், அவர்கள் தெரிவித்துள்ளனராம்.

இளைஞர்கள்மூவரும்இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

## யாழ். ரயில்நிலையத்தில் மூன்று இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நேற்றிரவு டிக்கட் வாங்குவதற்கு 'கியூ'வில் நின்ற 3 இளைஞர்கள் ரகசியப் பொலிசாரினால் கைது செய்யப் பட்டனர்.

மெயில்வண்டி பிரயாணிகள் 'கியூ'வில் நின்றுகொண்டிருந்த சமயம் அங்கு சிவல் உடையில் வந்த சுமார் பத்து 'சி. ஐ. டி' பொலிசார் துப்பாக்கி முனையில் மூன்று இளைஞரையும் கைது செய்து வெளியில் நின்ற வாகனத்திற்கு அழைத்துச்சென்றனர்.

இதனால், சிறிது நேரம் ரயில் நிலையத்தில் பிரயாணிகளிடையே பரபரப்பு ஏற்பட்டது

ரகசிய பொலிஸார், வாகனதிலிருந்தபடியே, இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டு இராணுவம் வந்ததும் 3 இளைஞர்களையும். அவர்களிடம் ஒப்படைத்தனர்

## 'அமிர்' இன்று லண்டன் செல்கிறார்

(மட்டுவில்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று லண்டனுக்குப் பயணமாகின்றார்.

பொதுநல பாராளுமன்ற அமைப்புக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ள திரு. அமிர்தலிங்கம் லண்டன் செல்கிறார்.

இக்கருத்தரங்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தொடர்ந்து மூன்று வாரங்கள் நடைபெறும்.

திரு. அமிர்தலிங்கம் இம் மாதம் 23ம் திகதி நாடு திரும்புவார்.

### 6 பேர் விடுதலை

லண்டன் பெப். 28

100 பேருடன்கடத்தப்பட்ட தான்சானியா விமானத்திலிருந்து 6 பணயக்கைதிகளை, கடத்தல்காரர் விடுதலை செய்துள்ளனர். (க)

## இலங்கை-பாகிஸ்தான் கிரிக்கட் போட்டி நேற்று நடக்கவில்லை

ராவல்பின்டி, பெப். 28

இலங்கை — பாகிஸ்தான் முதலாவது கிரிக்கெட்போட்டி மழைகாரணமாக இன்று நடைபெறவில்லை.

விளையாட்டு மைதானம் ஈரமாக இருப்பதால் போட்டி நடக்கவில்லை என்றும், இந்த நிலை நீடிக்குமானால் நாளையும் போட்டி நடக்க மாட்டாது என்றும் உத்தியோ பூர்வமாக

(8ம் பக்கம் பார்க்க)

அரிய சந்தர்ப்பம்

DIPLOMA IN HOTEL MANAGEMENT - பயிற்சி மீண்டும் ஒருபுதிய வகுப்புஆரம்பம் 3.3.82 அனைவரும் சேரலாம். இன்றும் நாளையும் (திங்கள்-செவ்வாய்)நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி

(விவேகானந்த அச்சகம் முன்பாக)

11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்.

2430

## யாழ். ப. நோ. கூ. சங்கம் 11 கிளை முகாமையாளர் வேலைநீக்கம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதினொரு கிளைகளைச் சேர்ந்த முகாமையாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனனர்.

சீனிவிற்பனவு மோசடி சம்பந்தமாக இவர்களுக்கெதிராக இயக்குநர்சபை எடுத்த நடவடிக்கையின் பேரில் பதினொரு பேரும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ். பல நோக்குகூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இயக்குநர்சபைக்கூட்டம்நடைபெற்றபோது மேற்கண்ட முடிவெடுக்கப்பட்டது. (மா)

### மணிவாக்கு

தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போல மனம் சிறந்துகொண்டே
பேசவுமறியாமற் பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்து நின் ருடுமயிலே.

— யோக சுவாமிகள்.

# நமது நோக்கு

## புதுக்கணக்கு

புதுக்கணக்கென்பது புதுவருடத்தைப் பார்த்திருக்கவேண்டியதில்லை.

புது வருடப்பிறப்பையடுத்து வரும், புதுத் தலைநகரில் திறக்கப்படும் இலங்கையின் புதியபாராளுமன்றத்தையும் காத்திருக்க வேண்டியதில்லை.

இவ்வித வைபவங்கள் கிரிக்கட்டைப்போல களைத்த மக்களுக்கு ஒரு உற்சாகம் ஊட்டும் சந்தர்ப்பங்களாகவே அமையும்; ஆனால் களைப்பும் மன விரக்தியும் நீண்டகாலம் நிலைத்துவிட்டால் இவ்வித வைபவங்கள் நடந்தேறுவதே மக்களுக்குத் தெரியாமற் போய்விடுவதும் இயல்பு. தேர்தலில் வாக்களிக்க இன்று மக்கள் விரும்புகின்றனரா?

நாம் குறிப்பிடும் புதுக்கணக்கு நாட்டைப் பற்றியதே! நாட்டின் அரசியல் நிலைமை, தேசிய ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி, வீழ்ச்சி, கல்வி ஏற்றம், இறக்கம், வாழ்க்கை வசதிகள் — றெயில், பஸ், போக்குவரத்து, தபால் தந்தி சேவைகளின் நிலைமை விவசாயம் — உற்பத்தி பற்றுக்குறை, தொழில்வசதிகள், வேலையின்மை, வர்த்தகம், வியாபாரம் இவற்றின் வளைவு நெளிவுகள் உல்லாசப்பயணத்தின் நன்மை தீமைகள்.

இவைபோன்ற மக்கள் தினசரி வாழ்வுக்கு இன்றியமையாத சேவைகளின் இன்றைய நிலை, நான்கரை வருட முடிவில் இந்த நாடு கண்ட முன்னேற்றம் ஒரு கணிதக் கட்டுப்பாட்டுடன் அல்லது கணக்காளர் பரிசோதனைப்பாங்கில் ஆராயப்படவேண்டியதில்லை.

சாதாரணமாக பொது மக்கள் எங்கும் — வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் இவை பற்றி பொதுவாக என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதே!

பேசப்படுவதெல்லாவற்றையும் அப்படியே விழுங்கிவிடுவதை நாம் கணிப்பதில்லை; அவையெல்லாம் தட்டி நிமிர்த்தி தயாரிக்கப்படும் அளவுகோல்கள்.

இந்தக் 'கணக்கெடுப்பு' மிக அவசியமென்பதை நமது பாராளுமன்றக் குழுவினர்க்கு அண்மையில் வற்புறுத்திய ஜனாதிபதி ஜெயவர்த்தன, தாம் ஆளுங்கட்சியாகையால் எறியும் கல்லெல்லாம் தங்களுக்கே என்பதையும் நினைவூட்டினார் நாட்டில் நிலவும் வரட்சியும் தங்கள் செலவில் எழுதப்படுமென்றார்.

ஒருமுறை ஆண்ட கட்சி எங்கள் நாட்டில் மறுமுறை வெற்றி பெறுவிட்டாலும், அது ஒரு அரசியல்நியதியாக கொள்ள இடமில்லை. கணிசமான 'வியாபாரம்' அரசியல் ஒருவித வியாபாரம்) நடைபெற்று ஆதாயம் அதிகமில்லாதபோதும், 'ஆன முதல்' அப்படியே இருப்பதோடு, செலவில் எழுதப்பட்ட பல விபரங்கள் பொதுமக்கள் சேமநலத்தில் காணப்பட்டால், நிச்சயம் ஆளுங்கட்சிக்கு அடுத்த தேர்தலில் வெற்றி!

ஆனால்பாராளுமன்றம் கலைக்குமளவிற்குக் காத்திருக்காமல் ஒவ்வொரு தொகுதி அங்கத்தவரும், இவ்வித 'புதுக்கணக்கை' தொகுதியிலே நடத்தவேண்டும். கட்சியின் செல்வாக்கில் நம்பி'மோ சம்போவது மடமை' கட்சிமுறையில் தேர்தல் நடைபெற்றாலும் மக்கள் நிராகரிக்கும் ஒருவர் கட்சிப்பட்டியலில் இடம்பெறுவதெப்படி? 'கையாட்கள்' மாயவலையில் சிக்கிநிற்காமல் நேரில்தொகுதிக்குயாத்திரை செய்வது அவசியம்.

ஐ. தே. கட்சிமட்டுமல்ல தேர்தலைக் காத்திருக்கும் ஒவ்வொருகட்சியும் பழையதும் புதியதும் இவ்வித புதுக்கணக்கு (Stock Tak ng) நடத்தல் வேண்டும். கட்சியின் பெயர் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமானதா? இதற்குவிடை சாதாரண சம்பாஷணையில் அகப்படும். ஐ. தே.கட்சியில், ஐக்கியம் எவ்வளவு? தேசியம் எவ்வளவு? ஐக்கியம் செலவாகிறது உண்மையா? தேசியம் எவ்வளவு எக்காலத்தில் இருந்தது!

அமரர் அமெரிக்க ஜனாதிபதி கெனடி சொன்ன மணிவாக்கை நாம் மாற்றியமைத்தால் கேள்வி இதுவாகும்; 'மக்கள் உங்களுக்கு இன்னுமென்ன நன்மை செய்யலாம் என்று கேளாதீர்கள்! நீங்கள் மக்களுக்கு இன்னும் ஏதும் செய்யமுடியுமா?'

எதிர்க்கட்சிகளான சிறிலங்கா (எஸ்+எம்), தமிழர் விடுதலைக் கூட்டணி, கம்யூனிஸ்ற் கட்சிகள் இவ்வித கேள்விகள் எழுப்பி விடை காண்பதே புதுக்கணக்கின் சம்பிரதாயமாகும்.

தனி எம். பி.யின் பலமே கட்சியின் பலம், கட்சியை நம்பியிருக்கும் சோம்பல் 'எம். பி.' கட்சியையும் சேர்த்துக்கொண்டு தேர்தலில் மண்கவ்வுதல் தெளிவு.

தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வித தனித்தனித் தொகுதி ஆராய்வு நடத்துவது அவசியம். விடுதலைப் பயணத்தின் விபரத்தை மக்களுக்கு விளக்க, அவர்களின் கருத்துக்களை அறிய காலம்தாழ்த்துவது அரசியல் ஞானமாகாது. 'தனிநாடு', 'தனி மாவட்டம்' போன்ற பெரிய—சிறிய பிரச்னைகள் பற்றிப் பொது மக்களின் கருத்தென்ன?

கூட்டணி—கூட்டு, அணியாகவிருக்கிறதா? தமிழ்க் காங்கிரஸ் இதனை ஆட்சேபிப்பதில் நியாயமுண்டா? இவற்றைஆராயாமல், கருத்துப்பேதங்களை உதவாத காரியங்களென்று கூட்டித்தள்ளிவிட்டால், அவை தேர்தல் காலத்தில் பெருநெருப்பாகிவிடும்.

இன்று பனிகாலம், இது போல தேர்தல் காலமும் மிகக் கவனமாகக் கழிக்க வேண்டிய காலமென்பது விளக்கத்தேவையில்லை.

---

# ஒரு மகாவித்தியாலயத்தின் 'கதை இது!

[பச்சிலைப்பள்ளி]

23 ஆசிரியர்கள் கடமையாற்றவேண்டிய ஒரு மகாவிதயாலயத்தில் 7 ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். இவ்வருட ஆரம்பத்தில் இம்மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் பெற்ற 10 ஆசிரியர்களில் இதுவரை இரு ஆசிரியர்கள் மட்டுமே வந்து கடமையை ஏற்றுள்ளார்கள்.

பருத்தித்துறைத் தொகுதியின் கிழக்குப் பிரதேசத்தில் ஒரே ஒரு மகாவித்தியாலயமான உடுத்துறை மகாவித்தியாலயத்திலேயே மேற்கண்ட நிலைமை காணப்படுகிறது.

இடமாற்றம் பெற்று இம் மகாவித்தியாலயத்திற்கு வரவிருந்த பலரின் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சுமார் 500 மாணவர்கள் கல்வி கற்கும் இம்மகாவித்தியாலயத்தில், அதிபர் உட்பட 7 ஆசிரியர்கள் மட்டுமே இருப்பதினால் மாணவர்கள் கடந்த ஒரு மாத காலமாக, உரிய கல்வியைச் சரிவரப் பெறமுடியாத நிலையில் வகுப்பறையில் இருந்துவிட்டுத் தினமும் வீடு திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பெற்றார் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடமும் இம்மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றுக்குறை நிலவிவந்தது.

இதேசமயம் இவ்வருடஆரம்பத்தில் இருந்து 4 ஆசிரியர்கள் ஆசிரியபயிற்சிக்கலாசாலைஅனுமதி பெற்றும், 2 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றும் இம் மகாவித்தியாலயத்திலிருந்து சென்றதிலிருந்து ஆசிரியர் பற்றுக்குறை அதிகரித்துள்ளது.

இப்பற்றுக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்.மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து 10 ஆசிரியர்கள் இம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டார்கள். இம்மாற்றம் பெற்றவர்களில் பலர் ஆசிரியைகள் என்றும் கூறப்படுகின்றது.

தற்போது இவர்களில் ஒரு ஆசிரியரும், ஒருஆசிரியையுமே வந்து கடமையை ஏற்றுள்ளனர்.

இந்நிலையில் இம்மகாவித்தியாலயத்தினதும், மாணவர்களினதும் எதிர்காலம் என்னவாகும் என்று பெற்றோர் கவலை அடைந்துள்ளார்கள்.

---

# மக்கள் கருத்து

## 84 வது ஆண்டு கிரிக்கெட் போட்டி

வடமாகாணத்தின் பிரபல கல்லூரிகளான யாழ். மத்திய கல்லூரி, யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிகளின் 84 வது வருடாந்த சாம்பியன் போட்டி பங்குனி மாதம் 19 ம், 20 ம் திகதிகளில் நடைபெற இருக்கிறது. சென்ற 11 வருட காலமாக 1971 ம் ஆண்டு முதல் 1981 வரை எந்த ஒரு கல்லூரியும் வெற்றியீட்டாமல் ஆட்டம் சரிசமமாக முடிவடைந்தது கிரிக்கெட் ரசிகர்கள் அறிந்ததே. இதுகால வரை பல கிரிக்கெட் ரசிகர்கள் 'ஈழநாடு' வாயிலாகவும், வேறு பத்திரிகைகள் மூலமாகவும் ஆட்ட நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தும் இவ்விரு கல்லூரி அதிபர்களும் கவனிக்கவில்லை தொடர்ந்து ஆட்டம் சரிசமமாக முடிவடைவதால் ரசிகர்களிடம் முன்னைய காலங்களில் காணப்பட்ட ஆர்வமும், விறுவிறுப்பும் குறைந்து செல்கின்றது. ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பே ஆட்டம் பற்றிய இறுதி முடிவினை ரசிகர் பலரும் அறிந்திருப்பர். ரசிகர்களுடைய உற்சாகத்தை அதிகரிக்கவும், ஆட்டம் பல வருடகாலமாக சரிசமமாக முடிவடைந்ததுபோன்றில்லாமல் வெற்றி அல்லது தோல்வி என்ற நிலையினை இரு கல்லூரி கோஷ்டிகளும் அடைய ஆட்ட நேரமோ அல்லது நாட்களோ நிச்சயம் அதிகரிக்கப்படவேண்டும். இரு கல்லூரிகளுமே சிறந்த வீரர்களைக்கொண்டு விளங்குவதால் இரண்டு நாள் ஆட்டம் போதாமல் இருக்கின்றது.

தென்மாகாணத்தின் பிரபல கோஷ்டிகளான றோயல், தோமஸ் கல்லூரிகளின் ஆட்டம் மூன்று நாட்களே இடம் பெறுகின்றது. வடமாகாண கிரிக்கெட் வீரர்கள் தென் மாகாண வீரர்களுக்குஎவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்ல. அவ்வகையில் இங்கும் ஆட்டத்தின் நேரமோ அல்லது நாட்களோ அதிகரிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கல்லூரி அதிபர்கள் இதனையிட்டு நடவடிக்கை எடுப்பார்களா?

ந. சூரியநாராயணன்,
ந. சிவநேசன்.
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

# சிங்கப்பூர் அரசியலும் பொருளாதாரமும்

கடந்த சில ஆண்டுகளாக சிங்கப்பூரில் விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரின்தொகை அதிகரித்து வருகிறது என்ற கட்டுரையில் தெரிவிக்கிறார்.

"சிங்கப்பூரிடம் எண்ணெய் வளம் இல்லை யானாலும் அது குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்ட பின், உலகிலேயே மூன்றாவது மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அது அமைத்துக்கொண்டது. அதிபாரக கப்பல்கள் வரக்கூடிய உலகின் இரண்டாவது மிகப் பெரிய துறைமுகமான 'ஹஸ்டனே' சிங்கப்பூர் கொண்டிருக்கிறது. மிகப்பெரிய தொழிலதிபர்கள் தமது தலைமையகங்களைச் சிங்கப்பூரில் அமைத்துள்ளனர். எலக்ட்ரோனிக், பெட்ரோல், ரசாயன, இயந்திர நிர்மாண தொழில்துறைகளிலும் எண்ணெய்க் கிணறுகளைத் துளையிடும் மேடைகள் மற்றும் எண்ணெய்க் தொழில் துறை சாதனங்களை உற்பத்தி செய்வதிலும் இந்நாடு முன்னேறி வருகிறது, இத்தொழில் துறைகள் யாவும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரின் பொருளாதார சாதனைகள் வெளிநாட்டு மூலதனங்களை மிக அதிகமாக ஈர்த்துள்ளன. 1981ல் இங்கு அமெரிக்காவின் மூலதனம் மட்டும் 300 கோடி டலர்களாகும். இதைத் தவிர ஜப்பான், பிரிட்டன், நெதர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகியனவும் பெருந்தொகையான மூலதனத்தை இட்டுள்ளனர். இந்த ஐந்து நாடுகளும் சிங்கப்பூரின் வெளிநாட்டு மூலதனத்தில் 81 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

தென்கிழக்காசியாவில் அமெரிக்க ராணுவம் கட்டியெழுப்பப்படுவதையும் ஜப்பான் விரைவில் ஆயுதபாணியாவதையும் சிங்கப்பூர் ஆதரிக்கிறது. சீனவுடன் ராஜரீக உறவுகளை அது கொண்டிருக்கவில்லையாயினும் எந்தவொரு ஆசியான் நாடுகளும் கொண்டிருக்காத வர்த்தக, பொருளாதார, மற்றும் உறவுகளைச் சீனவுடன் கொண்டிருக்கிறது. சீனவுடனை பொருளாதாரஒத்துத்துழைப்பிபெரும்ன் ஆதாயங்களை எதிர்பார்க்கும் சிங்கப்பூர், மேற்குலகின் நவீன தொழில் நுட்பத்தையும் சீனவுக்கு அளிக்கும் நடுவனுகை இருந்தும் வருகிறது. சிங்கப்பூரின் ஜனத்தொகையில் 76 சதவீதமானவர்கள் சீனமக்கள். இதர தென்கிழக்காசிய நாடுகளில் வாழும் சகல சீனமக்களும் தமது மூலதனங்களை சிங்கப்பூருக்குக் கொண்டுவருகின்றன. சீனவின் நான்கு நவீனமயத்திட்டத்துக்கு சிங்கப்பூரிலிருந்தும் அதனூடாக இதர நாடுகளிலிருந்தும் வரும் மூலதனம் அவசியமாகவுள்ளது.

---

# இந்து மாநாட்டையொட்டி பக்திப்பாடல் போட்டி

(சுழிபுரம்)

அகில உலக இந்து மாநாட்டையொட்டி பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்படும் பக்திப் பாடல்கள் இசைப்போட்டிக்கு நாடு முழுவதும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இசைத் தராதரம்பெற்றவர்கள் ஒரு பிரிவாகவும். ஏனையோர் ஒரு பிரிவாகவும் போட்டியில் கலந்துகொள்ளவாக வகுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வயதெல்லையோ, போட்டிப்பிரவேசக் கட்டணமோ கிடையாது.

போட்டிகள் மாவட்டம் தோறும் நடாத்தப்பட்டு இறுதித்தேர்வு கொழும்பில் நடைபெறும். முதலாவது பரிசாக ரூபா ஆயிரம் பெறுமதியான தங்கப் பதக்கமும், இரண்டாவது பரிசாக ரூபா எழுநூற்றி ஐம்பது பெறுமதியான பதக்கமும், மூன்றாவது பரிசாக ரூபா ஐநூறு பெறுமதியான பதக்கமும்வழங்கப்படவுள்ளது

இப்போட்டி சம்பந்தமான விபரங்களை பிரதேச அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### சம்பளம் கிடைக்கவில்லை

[கோண்டாவில்]

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபையில் நடுக்கட்டு உத்தியோகத்தர்களாகக்கடமை புரிபவர்களுக்கான தை மாதச் சம்பளம் பணம் இன்னும் வழங்கப்படவில்லையாம்.

அபிவிருத்திசபை இயங்கத் தொடங்கிய நாளில் இருந்தே இவர்களின் சம்பளப்பணம் ஒழுங்காகக் கிடைப்பதில்லையென்றும் இவர்கள் தமது சம்பளப்பணத்தைப் பெறுவதில் ஒவ்வொரு மாதமும் பெரும் சிரமம் அடைய வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது, [அ]

வைபவங்களில்

# தேசியக் கொடியுடன் நந்திக் கொடிக்கும் அந்தஸ்து

## மா. அபி. சபைக் கூட்டத்தில் இன்று ஆராயப்படும்

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்கத்திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், ஏனைய பொது ஸ்தாபனங்களில் தேசியக் கொடிகள் பறக்கவிடப்படும் சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாண மாவட்ட சின்னமான நந்திக் கொடியும் சேர்த்துப் பறக்கவிடப்பட வேண்டும்'' என்ற தீர்மானம் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையில்ஆராயப்படவிருக்கின்றது. நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் யாழ் மாவட்ட அபிவிருத்திசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நந்திக் கொடி பற்றிய பிரேரணை பரிசிலனைக்கெடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

அபிவிருத்திசபைஉறுப்பினர் திரு. க. சின்னத்துரையினல் மேற்படி தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. நந்திக் கொடியை யாழ். மாவட்டத்தின் தேசியக்கொடியாக ஏற்று இலங்கை தேசியக்கொடியுடன் நந்திக்கொடியையும்சேர்த்துப் பறக்கவிடப்பட வேண்டும் என்று திரு. சின்னத்துரை தமது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த விஷயம் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

### நான்கு கேள்விகள்

விதை உருளைக்கிழங்கு, விநியோகம் சம்பந்தமாக நான்கு கேள்விகளும் இக்கூட்டத்தில் கேட்கப்படவுள்ளன. உருளைக்கிழங்கு விநியோகம் பற்றியும், கிழங்கிற்குக் கட்டிய பணம் விவசாயிகளுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டு, கொடுக்கப்படாதது சம்பந்தமாகவும் நான்கு கேள்விகளுக்கு முன்னறிவித்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கேள்விகளுக்கான முன்னறிவித்தலை உறுப்பினர் திரு.க.சின்னத்துரை கொடுத்துள்ளார். நிகழ்ச்சிகளில் இக்கேள்விகள் முதலாவதாக இடம்பெறுகின்றன.

### மாட்டிறைச்சிக் கடைகள்

உரும்பராய், புத்தூர், ஏழாலை உப அலுவலகங்களின் பிரிவுகளில் மாட்டிறைச்சிக் கடை வைத்திருப்பதற்கு அனுமதி வழங்குவது சம்பந்தமாகவும் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது.

### நந்திக் கொடி

யாழ்.மாவட்ட அபிவிருத்தி

(5ம் பக்கம் பார்க்க)

''கருத்து வேறுபாடுகளை

# இளைஞர்கள் தலைவர்களுடன் பேசித்தீர்க்கவேண்டும்''

## யாழ். அபி. சபைஉறுப்பினர் கூறுகிருர்

(யாழ்ப்பாணம்)

''தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் ஒருசில உறுப்பினர்களுக்கிடையே கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனல் அவர்கள் கூட்டணியை விட்டு பிரிந்து சென்று வேறேர் புதிய அமைப்பினை உருவாக்க ஒருபோதும் முனையமாட்டார்கள். இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடிவரும் ஒரே கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியே யாகும். கடந்த 30 வருடங்கள் தமிழ் மக்கள் இருபெரும் கட்சிகளாக பிளவுபட்டிருந்தமையால் எமது அடிப்படை உரிமைகளை கூடபெறமுடியாமலிருந்தது''

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம் காரைநகர், வலந்தலை அம்பாள் சமூகசேவா கலாமன்றத்தின் எட்டாவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''தமிழ்ஈழ இல்ட்சியத்தை அடைவதற்கு இயக்கத்தில் தீவிரம் போதாதெனக்கூறும் கூட்டணி உறுப்பினர்களையும் ஒருசில கூட்டணி எம். பிக்களையும், மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய புதிய அரசியல்கட்சியொன்றை உருவாக்குவதற்கு சிலர் முயற்சி மேற்கொள்வதாக கூறப்படுகிறது. இதில் எவ்வித உண்மையுமில்லை. கூட்டணிக்குள் பிளவினை ஏற்படுத்தநினைக்கும் சில தீய சக்திகளின் விஷமத்தனமான பொய்ப்பிரசாரமே இது.

''கூட்டணித் தலைமைக்கும் இளைஞர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருத்தல் அவசியம். கருத்துவேறுபாடுகளை இளைஞர்கள் தலைவர்களுடன்பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும்.

''எமது நாட்டின் பொருளாதாரநிலை இன்று மோசமான நிலையை அடைந்துள்ளது. அரசாங்கத்திடமிருந்து அபிவிருத்திவேலைகளுக்கு பணம் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இதனுல் எமது பிரதேசங்களை நாமே அபிவிருத்திசெய்யவேண்டும்.

''மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படும்வரை நாம் எமது பகுதிகளில் எத்தகைய அபிவிருத்தித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முடியாமலிருக்கிறது'' என்ருர்.

# கல்வி அதிகாரிகள் குழு திடீர் விஜயம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரிக்குதிடீர்விஜயம் செய்த வடமாநில கல்வித் திணைக்கள கல்வியதிகாரிகள் குழு கல்லூரி நிலைமைகளை ஆராய்ந்தபின்னர் திருப்தி தெரிவித்தனர்.

காங்கேசன்துறை கல்விவட்டாரத்தில் அண்மையில் 1வது திடீர் கண்காணிப்பு நடைபெற்றபோது காங்கேசன் துறை சிங்கள கனிஷ்ட வித்தியாலய அதிபர் பாடசாலையை குறித்த நேரத்திற்கு முன்னதாக மூடியது கண்டுபிடிக்கப்பட்டு அவர் தற்காலிகவேலை நீக்கம்செய்யப்பட்டார். இரண்டாவது திடீர் கண்காணிப்பு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்றது. பிரதம கல்வியதிகாரி திரு. வி. சபாநாயகம் தலைமையில் கல்வியதிகாரிகள்குழு இக்கல்லூரிக்கு விஜயம்செய்து கல்லூரி ஒழுங்கு, கட்டுப்பாடு மாணவர்கள் ஆசிரியர்களது நிலை என்பனபற்றியெல்லாம் ஆராய்ந்தனர்.

கல்லூரியின்நிலைமை குறித்து திருப்தி தெரிவித்துவிட்டு அவர்கள் சென்றனர்

# ''வீட்டுத் தோட்டத்தில் மாணவர் ஈடுபடவேண்டும்''

## -- யாழ். பிரதம கல்வி அதிகாரி

[கரவெட்டி]

''மாணவர்கள் வீட்டுத் தோட்ட விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம் அன்ருட உணவுச் செலவின் ஒரு பகுதியைச் சேமித்துக்கொள்ள முடியும்.''

இவ்வாறு யாழ் பிரதமகல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் யாழ்.கல்வித் திணைக்களத்திஞல் நடாத்தப்பட்ட மாவட்ட விவசாயப்போட்டிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடந்த இவ்விழாவிற்கு யாழ்.மாவட்டவிவசாயக்கல்வி அதிகாரி செல்வி ரீ. பெரியதம்பி தலைமை வகித்தார். பிரதம கல்வி அதிகாரி திரு. சபாநாயகம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இலங்கையில் வாழும் மக்களில் ஐம்பது சத வீதத்தினர் விவசாய வாழ்க்கையை நம்பி வாழ்ந்துவருகின்றனர். எனவே விவசாயம் எமது சமுதாயத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

''மாணவர்களுக்கு விவசாய அறிவைப் போதிப்பதனுல் அவர்கள் சிறுவயது தொட்டே விவசாயத்தில் ஈடுபடுவதற்கும் தாம் பெற்ற அறிவைப் பெற்றோர்கள், உறவினர்களுக்கும் கொடுத்து அதன மூலம் நவீன முறையில் விவசாய ஆக்க வேலைகளைச்செய்வதற்கு உதவி புரிகின்ருர்கள்'' என்ருர்.

தொழிலதிபர் திரு. கனகராசா, பல்தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. இராஜேந்திரா, இளைப்பாறிய தொழில்நுட்பக் கல்விஅதிகாரி திரு ஈ.வி. இராமநாதன் ஆகியோரும் பேசினுர்கள்.

# தாலிக்கொடி, சங்கிலி பறித்த மர்ம ஆசாமி!

(மாவிட்டபுரம்)

பற்றைமறைவிலிருந்து திடீரெனப் பாய்ந்த ஆசாமி ஒருவர் வீதிவழியாகச் சென்ற பெண்ணின் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, சங்கிலி என்பவற்தை அபகரித்தாராம்!

கீரிமலை கூவில் வீதியில் கருகம்பானையைச் சேர்ந்த லீலாவதி சிவதாசன் என்பவரே இவ்வாறு தாலிக்கொடி, சங்கிலி என்பவற்றை இழந்தவராவார்.

இதுகுறித்து காங்கேசன் துறை பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டதையடுத்து கான்ஸ்டபிள் திரு. எஸ். மாணிக்கவாசகர் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

# சபைக்கு வந்த வெங்காயம்

(கொழும்பு)

பம்பாயில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம்தான் பம்பாய் வெங்காயமா?

ஹங்கேரியிலும் (பம்பாய் வெங்காயம் உற்பத்தி செய் செய்யப்படுகின்றதா?

இந்தச் சர்ச்சை கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

''கொழும்பு கூட்றவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தில் பம்பாய் வெங்காயம் என்று கூறி ஒரு வெங்காயம் விற்கப்படுகிறது. ஹங்கேரியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த வெங்காயம் ஹங்கேரி வெங்காயமா— பம்பாய் வெங்காயமா அல்லது பம்பாய் முட்டாய்தானு எனக்குத் தெரியாது. ஆனுல் அந்த வெங்காயம் நாள் ஒன்றுக்கு ஒரு விலையில் விற்கப்படுகிறது. இதனுல் பாவனையாளர்கள் பாதிக்கப்படுகிருர்கள்'' என்று ஒத்திவைப்புப் பிரேரணையின் போது ஹரிஸ்பத்து 2 வது எம். பி, திரு. ஆர். பி. விஜயசிறி கேள்வி எழுப்பினுர்.

முதல்நாள் கிலோ ஒன்று 4ரூபா 50 சதமாக தனியார் துறையினருக்கும் கூட்டுறவுக் கடைகளுக்கும் விற்கப்பட்ட வெங்காயத்தை வாங்குவதற்கு வெளியூரிலிருந்து வந்த கூட்டுறவுக் கடையைச் சேர்ந்த ஒருவருக்கு கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத்தில் அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. ஆம் அவருக்குஅதே வெங்காயம் கிலோ 5ரூபா50 சதம் என்று கூறப்பட்டது. மீண்டும் தமது சங்கத்துக்குச் சென்று 5 ரூபா 50 சத விலைக்கான பணத்தை எடுத்துவரும் போது அதன் விலை மேலும் அதிகரித்துவிடுமோ என்றுகூட பயப்படவேண்டி இருந்தது. ஏன் இந்த விலைமாற்றம் என்றும் திரு. விஜயசிறி கேட்டார்.

''நாட்டில் சின்னவெங்காயம் கிலோ 28 ரூபாவுக்கு விற்கப்பட்டபோது பாவனையாளர்களின் நலன்கருதி இந்தியாவிலிருந்துஇறக்குமதிசெய்ய முயன்ருேம் முடியவில்லை. ஹங்கேரியிலிருந்து இறக்குமதி செய்தோம். அது இங்கு வந்து சேர்ந்தபோது இங்கு வெங்காயத்தின்விலை குறைந்துவிட்டது.கூடியவிலைக்குஇறக்குமதி செய்யப்பட்டதற்காக அந்த வெங்காயத்தை வைத்திருக்க முடியுமா? எனவே தான் சந்தைவிலைக்கு அமைய விலையை கூட்டியும் குறைத்தும் விற்ருேம்'' என்று பதில் அளித்தார் வர்த்தக அமைச்சர்திரு. அத்துலத்முதலி.

இக்கேள்வியை ஹரிஸ்பத்துவ எம்.பி. எழுப்பியமையிட்டு தாம் மகிழ்ச்சி அடைவதாதகவும் தெரிவித்த அமைச்சர், பம்பாயில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் மட்டும்தான் பம்பாய் வெங்காயம் அல்ல, இந்த பம்பாய் வெங்காயம் வேறு நாடுகளிலும் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் கூறினுர். (இ)

# வெட்டுக்காயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில்

## 15 பேரைப் பொலிஸ் தேடுகிறது

(யாழ்ப்பாணம்)

பலத்தகாயங்களுக்குள்ளான ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த எஸ். சிவலிங்கம் (38) வயது என்பவரே படுகாயங்களுக்குள்ளானவ ராவார்.

இவர் வாளால் வெட்டப்பட்டு பொல்லால் தாக்கப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

இச் சம்பவம் தொடர்பாக 15 பேர் கொண்ட கோஷ்டி ஒன்றைப் பொலிசார் தேடி வருகின்றனர். (மா

''கல்வித்துறையில்

# பொதுமக்களின் அக்கறை அருகிவருகின்றது''

(புங்குடுதீவு)

''கிராமத்து மக்கள் அனைவரும் தமது தனிப்பட்டவிருப்பு வெறுப்புக்களை மறந்து ஒற்றுமையுடன் ஒன்றுபட்டுப்பொது இயக்கங்களில் இணைந்துசெயற்படுவதன்மூலமே தமது கிராமத்தினை முன்னேற்றமடையச்செய்யமுடியும். பேதங்களும் பிரிவுகளும் மக்சட்சமுதாயத்தைமறுமலர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்லமாட்டாது என்பதை அனைவரும் உணரவேண்டும்.''

இவ்வாறு புங்குடுதீவுமடத்துவெளி சனசமூக நிலைய இருபத்தெட்டாவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சட்டத்தரணி எஸ், கே. மகேந்திரன் கூறினுர்.

நிலையத் தலைவர் திரு. இ. குலசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நிலையப் பொறுப்பாளர் திரு. ப. யோகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்திஞர். இவ்விழாவில் திரு. மகேந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

''இன்றைய சமூக அமைப்பில் கல்வித்துறையில் பொதுமக்கள் காட்டும் அக்கறை அருகிவருகின்றது. கல்விக்குரிய வசதிகளை அளிக்கவேண்டியது அரசினருக்குரிய கடமையென்றும் கல்வி புகட்டவேண்டியது ஆசிரியர்களின் கடமையென்றும் பெற்ருேர்கள் கருதுவாளாவிருக்கின்றனர். இந்நிலை பெரிதும் வருத்தத்திற்குரியது. பொது இயக்க ரீதியாக பெற்ருேர் இணைந்து தமது உழைப்பில் ஒரு பகுதியை ஈந்து கல்விச்சாலைகளின் தேவைகளை நிறைவேற்றவேண்டும். சகலதிற்கும் அரசை எதிர்பார்த்திருப்பது பொருத்தமானதல்ல. ஒவ்வொருவரும் தனது சுயமுயற்சியின்மூலம் முன்னேற முயலவேண்டும்'' என்ருர்.

குரும்பசிட்டி கொள்ளைச்சம்பவம்:

# இருவர் றிமாண்ட்;

## 4 பேர் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான சந்தேகநபர்களில் இருவர் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர். ஏனையோர் தலா 2000 ரூபா சரீரப்பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

குரும்பசிட்டியில் வி. சொர்ணலிங்கம் என்பவரது வீட்டில் 16,250 ரூபா பெறுமதியான நகைகளையுங், சி. தம்பித்துரை என்பவரது வீட்டில் 29,500 ரூபா பெறுமதியான நகைகளையும் ஆயுதமுனையில் கொள்ளையடித்தது தொடர்பாக குரும்பசிட்டியைச் சேர்ந்த வே. இராசலிங்கம், வசாவிளானைச் சேர்ந்த செ. சார்ள்ஸ் மகேந்திரன், செ. புலேந்திரன், செ. ரகுராஜா, அ. தர்மராஜா, செ. இரவீந்திரராஜா ஆகியோர் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டு 2ம், 5ம் சந்தேகநபர்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டிருந்தனர். மற்றவர்கள் அடையாளம் சாணப்படவில்லை. இவர்கள் மல்லாகம்நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்ட சமயம் பிணையில் விடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அடையாளம் காட்டப்பட்ட இருவரையும் தொடர்ந்து றிமாண்டில்வைக்க உத்தரவிட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் ஏனையோரை தலா 2000ரூபாசரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், ஆர். பி. சபாரத்தினம். ஜிம்மி இராஜரத்தினம், கே. விஜயேந்திரா, எம். ஸ்ரீதரன் ஆகியோர் ஆஜராகினர்.

## அரசு செலவில் அடக்கம்

(புலோலி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் மடத்தில் மரணமானவரின் சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

துன்னாலையைச் சேர்ந்த பொன்னையா கந்தையா(வயது 49) என்பவரே இக்கோவில் மடத்தில் வாழ்ந்து திடீரென மரணமானவராவர்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை உடுப்பிட்டி பதில் மேலதிக மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டார்.

இவரின் பிரேதத்தைப் பொறுப்பேற்க எவரும் முன்வராததால் மரணவிசாரணை அதிகாரி பிரேதத்தை அரச செலவில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார்.

# ஊர்காவற்றுறைத் தொகுதி விசேட சேவை அலுவலர்கள்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதி விசேடசேவை அலுவலர்களாகப் பின்வருவோர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு — குணரத்தினம் சிவகுலசிங்கம் மண்டைதீவு அல்லைப்பிட்டி, காராளசிங்கம்கணேசலிங்கம் வேலணை கிழக்கு மேற்கு, சோமசுந்தரம் சச்சிதானந்தன் புங்குடுதீவு கிழக்கு மத்தி குமாரசாமி சந்திரன் புங்குடுதீவு மேற்கு நெடுந்தீவு கிழக்கு மதியாபரணம் அம்பிகைபாகன் நயினாதீவு வடக்கு தெற்கு நல்லான் தேவன் சரவணை

இவ்உத்தியோகத்தர்களுக்குரிய பயிற்சி வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்று வருகின்றது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு— என். நடராசா நெடுந்தீவுமத்தி மேற்கு.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க பிரிவு — ஆர். சந்திரசேகரம் அனலைதீவு எழுவைதீவு என். மோகனதாஸ், கரம்பன் சுருவில் கே. சகாதேவன் நாரந்தனை ஊர்காவற்றுறை இவர்களுக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பயிற்சி நடைபெற்று வருகின்றது.

## பட்டதாரி ஆசிரியர்கள்: விபரம் திரட்டப்படுகிறது

(மாவிட்டபுரம்)

பாடசாலைகளில் உயர் வகுப்புகளில் போதிக்கும் பட்டதாரி ஆசிரியர்களது நிலையை அறியுமுகமாக அவர்களது விபரங்களை கல்வி அமைச்சு சேகரித்து வருகிறது.

உயர் வகுப்புகளில் போதிக்க வேண்டிய பட்டதாரி ஆசிரியர்கள் பலர் கீழ் வகுப்புகளில் போதிப்பதில் ஈடுபடும் அதேநேரத்தில் உயர் வகுப்புகளில் ஆசிரியர்கள் பற்றுக்குறையாக இருக்கின்றனராம். இந்நிலையில் உயர்வகுப்புகளில் போதிக்கும் பட்டதாரி ஆசிரியர்களது விபரங்களைத் திரட்டி அவர்களது நிலையை அறிய கல்வி அமைச்சு முன்வந்துள்ளது.

இது சம்பந்தப்பட்ட பட்டியலை தயாரித்து அனுப்பி வைக்குமாறு சகல பிராந்திய கல்விப் பணிப்பாளர்களையும் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

## சட்டவிரோத காணி விற்பனை

(யாழ்ப்பாணம்)

மணிப்புரி கிராம குடியேற்றத்திட்டத்தில் காணிபெற்றவர்கள் நிரந்தரமாக அங்கு வாழாமல் சட்டவிரோத காணிவிற்பனையில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது.

காணியில்லாமல் பலர் அவதிப்பட வசதியுள்ளவர்கள் மணியன் தோட்டத்தில் காணிகளைப் பெற்றுக் கொண்டதால் அவர்கள் வெறும் கொட்டில்கள் போட்டு நவீன காணிவியாபாரம் செய்வதாகச் சொல்லப்படுகிறது.

இதன் எதிரொலியாக காணியில்லாதவர்களுக்கே தீரவிசாரித்து காணிவழங்க வேண்டுமென மணிப்புரி மக்கள் மன்றம் காணியதிகாரிகளைக் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

"சாரணீயத்திற் சேருபவர்களுக்கு

## புனிதமான பொதுச்சேவை மனப்பாங்கு வேண்டும்"

(சாவகச்சேரி)

"நாவற்குழியிலிருந்து கிளிநொச்சிவரை எங்கள் மாவட்டம் பரந்திருக்கிறது. 150க்கு மேற்பட்ட பாடசாலைகள் இருந்தும் 10, 15 பாடசாலைகளில்தான் சாரணர் குழு இயங்கிவருகின்றது. பிரதானமாக இன்னும் சில பாடசாலைகளை சாரண இயக்கத்திற் சேர்க்க முயற்சி செய்து வருகிறோம்"

மேற்கண்டவாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடந்த சாரணீய ஸ்தாட்கர் தினமும் 125வது பிறந்த தினமும் கொண்டாடியபோது யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. கே. கோபாலரத்தினம் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் பொறுப்பான, உண்மையான, சமுதாயம் உருவாகச் சாரணீயம் போல வேறொன்றுமில்லை. சாரணீயத்திற் சேருபவர்கள், புனிதமான பொது சேவை, நேர்மை, பிறருக்கு உதவிசெய்யும் மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்கவேண்டும். என்றார்.

சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். யேசுதாசன் உரையாற்றினார்.


# வடமாகாண மக்களுக்கு புத்தாண்டுப் பரிசு!

# ரூபாய் 5000க்கும் அதிக பெறுமதிமிக்க

# பரிசுகளை வென்றெடுங்கள்!!

National

நாஷனல்

SONY. THE ONE AND ONLY

சொனி



வர்ண-கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளை எமது ஸ்தாபனத்தில் மார்ச் 1-ம் திகதி முதல் ஏப்ரல் 15-ம் திகதிவரை கொள்வனவு செய்யும் பற்றுச்சீட்டுக்குரிய அதிர்ஷ்டசாலிகளே இப்பரிசுகளை வென்றெடுக்கும் வாய்ப்பினை அடைவர்.

- முதலாம் பரிசு : நாஷனல் (கறுப்பு வெள்ளை) தொலைக்காட்சிப் பெட்டி
- இரண்டாம் பரிசு : ஏஷியா சைக்கிள்
- மூன்றும் பரிசு : நாஷனல் றைஸ் குக்கர்

ஆகிய பெறுமதிமிக்க பரிசுகளை வென்றெடுக்க இன்றே விரையுங்கள் . . . .

உத்தரவாதத்திற்கும் அதிசிறந்த சேவைக்கும்

# சி. சின்னத்துரை அன் பிரதர்

39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 283 - 284. தந்தி : "கல்கி"

# இடைக்காலத் தடைஉத்தரவை ஆலயக்குருக்கள் மீறிஞராம்

## விசாரணை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

நீதிமன்ற இடைக்காலத் தடையுத்தரவை மீறியதாக ஆலய குருக்கள் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் அவர் தாம் சுற்றவாளி எனக் கூறியதால் விசாரணைக்காக வழக்கு ஏப்ரல் 29ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

கொல்லங்கலட்டி வீரகத்தி பிள்ளையார் கோவிலில் புதிதாக எவ்வித நிரந்தரக் கட்டிடங்களையும் கட்டக்கூடாதென்றும். புதிய விக்கிரகத்தை அதாவது அம்பாளை பிரதிஷ்டை செய்யக்கூடாதென்றும் 1980ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி சு. சிவசண்முகானந்தக் குருக்கள் மீதும் ஏனைய சிலர் மீதும் மல்லாகம் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை விதித்திருந்தது. ஆனல் இந்த உத்தரவு அமுலில் இருக்கும்போது மேற்படி சு. சிவசண்முகானந்தக்குருக்கள் இவ்வாலயத்தில் கொடிஸ்தம்பத்திற்குவடக்குப் பக்கமாக சிவன் வாசலில் சிமெந்துகல் என்பவற்ருல் நிரந்தர கட்டிடங்கள் அமைத்து நந்தி, பலிபீடம், கொடிஸ்தம்பம் ஆகியவை பிரதிஷ்டைசெய்து மேற்படி உத்தரவை மீறியதுடன் நீதிமன்றத்தையும் அவமதித்துள்ளார் என்று குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தது.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த வி. கணேசலிங்கம், வி. குமாரசாமிக்குருக்கள், வி. மகாலிங்கம், தி. பராசக்தி, மைத்திரேகி கனகசபாபதி ஆகியோர் சார்பில் சட்டத்தரணிகள் அ. முத்துக்கிருஷ்ணன், வி. எஸ். கணேசலிங்கம் ஆகியோர் இவ்வழக்கை தாக்கல்செய்திருந்தனர்.

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது குற்றம்சுமத்தப்பட்ட குருக்களிடம் குற்றவாளியா? சுற்றவாளியா? என்று கேட்கப்பட்டது.

அவர் சுற்றவாளி என்று கூறியதால் வழக்கு விசாரணைக்காக ஏப்ரல் 29ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. மேற்படி குருக்கள் தரப்பில் சட்டத்தரணி தர்மலிங்கம் தில்லை நடேசனின் அனுசரணையுடன் சட்டத்தரணி அ. குமரகுரு ஆஜராஞர்.

## ஆண்டு விழா

(பண்டத்தரிப்பு)

மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுப்போட்டிகளும் எதிர்வரும் மார்ச் மாதம் 5ம், 6ம், 7ம் திகதிகளில் விமரிசையாக நடைபெறவுள்ளன. விளையாட்டுப்போட்டிகளில் யாழ் மாவட்ட ரீதியில் மின்னொளியில் புதியமுறையிலான கரபந்தாட்டப் போட்டியும், மகளிருக்கான வலைப்பந்தாட்டப்போட்டியும் மற்றும் மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகளும் நடைபெறவுள்ளன. 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு படிப்பகத் தலைவர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இறுதிவிழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை தொகுதி எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

நவஜீவனத்தில்

## மாணவர் கருத்தரங்கும் பாசறையும்

(அரியாலை)

மாணவர் புத்துயிர் மன்றம் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவ மாணவிகளுக்கென நடாத்திய கருத்தரங்கும் பாசறையும் பரந்தன் நவஜீவனத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பித்து ஞாயிறு மாலை முடிவடைந்தது.

சமுதாயத்தின் விடுதலைத் தாகம்' என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் உற்சாகமூட்டும் கலந்துரையாடல்கள், கற்பனையை உந்தும் கலை நிகழ்ச்சிகளும், சிந்தனையைக் கிளறும் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

''முழுமனுக்குலமுமே அடிமைத்தனத்தில் உழல்கின்றதா?'', 'சரித்திரப்புகழ் வாய்ந்த ஓர் புரட்சிவாதி!' 'பூரண சுதந்திரத்தைப் பெற வழி என்ன?' என்ற தலைப்புக்களில் திருவாளர்கள் சூரிவில்லியம், ஸ்ரீபன், கோதிகூல் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்கள்,

நவஜீவன ஆலயத்தில் நவஜீவன அதிபர் அருட்திரு ஏ. சி. தம்பிராசா அடிகளார் ஞாயிறு காலை நடைபெறும் ஆராதனையை ஒப்புக்கொடுத்து அருளுரை வழங்கினர்.

கடவுச்சீட்டுக்கு

## பிறப்பு அத்தாட்சி பத்திரம் தேவையில்லை

கடவுச்சீட்டு கோரி விண்ணப்பிப்போர் இனிமேல் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்றும் வாக்களர் பட்டியல் இலக்கமும் அடையாள அட்டையும்போதுமானது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## தன்சானியா விமான கடத்தல்

லண்டன், பெப் 28

தன்சானியா தீவிர வாதிகள் கோஷ்டி யொன்றிஞல் கடத்தப்பட்ட தன்சானி விமானத்தை லண்டனிலுள்ள சிறிய விமான நிலையமொன்றில் இறக்குவதற்கு கடத்தல்காரர் அனுமதி கோரியுள்ளார்கள்.

## நூலக நிதி சேகரிப்பு

(மண்டைதீவு)

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய புனரமைப்புக்காக நிதி சேகரிப்பு வைபவம் நேற்றுக் காலை திருநெல்வேலி சந்தையில் நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், யாழ். மாவட்ட சபை உறுப்பினர் திரு. சி. நாகராசா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க உறுப்பினர்களும், விவசாயக் கழக அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த உற்சவம்

(வேலணை)

புங்குடுதீவு கிழக்கு தலைப்பற்று அருள்மிகு முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 15 தினங்களுக்கு உற்சவங்கள் நடைபெறவிருக்கின்றன.

இம்மாதம் 7ம் திகதி தேர்த் திருவிழாவும், 8ம் திகதி தீர்த்தோற்சவமும், 9ம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளது.

## தெரிவு

(வேலணை

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக திரு. நாகரத்தினம் பாலச்சந்திரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# 'மன்னிப்பு தெய்வீகத்தையே பிரதிபலிக்கிறது''

-- திருமண்டலப் பேராயர்

(அரியாலை)

''கடவுளின் மன்னிப்புத்தான் கடவுள் நமக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களுக் கெல்லாம் பெரிய ஆசீர்வாதமாகும் மன்னிப்புத்தான் மனிதனின் நடத்தையிலும் பெரிதாக இருக்கிறது இது தெய்வீகத்தைப் பிரதிபலிக்கின்றது. இதுதான் கிறிஸ்தவ சுவிசேஷம், இந்த சுவிசேஷத்தில் நாம் அனுதினமும் எச்சூழ்நிலையிலும் ஜீவிக்க 'லெந்து' காலம் திரும்பவும் அழைக்கின்றது''

இவ்வாறு கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட் திரு. சுவீதின் பெர்ஞண்டோ ஆண்டகை கொழும்பு அத்தியட்சாதீன மக்களுக்கு லெந்து காலத்தில் எழுதும் நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாகியிருக்கிறது. தூதருக்குள்ளே காணப்படும் இச் சந்தோஷத்தை நாம் ஒவ்வொருவரும் எமக்குள்ளே கூட்டுவோம். தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன்' என்று ஒவ்வொருவரும் கூற நாம் கற்றுக் கொள்ள வேண்டும'' என்று லெந்து நிருபம் கூறுகிறது.

## வைத்தியசாலை ஊழியர் மோசடி செய்தாராம்

(மண்டைதீவு)

வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி வைத்தியசாலை ஊழியர் ஒருவர் பதிஞுயிரம் ரூபாயை மோசடி செய்து விட்டதாக மண்டைதீவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மண்டைதீவு ஆரும் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. என். மாசிலாமணி, யாழ் பொலிஸ் அதிபருக்குச் செய்துள்ள முறைப்பாட்டில், குடும்பத்தில் நிலவும் வறுமை காரணமாக தனது மகன் வெளிநாடுசெல்ல முயன்றதாகவும், இதனைத் தொடர்ந்து காணியை அடகு வைத்து பதிஞுயிரம் ரூபாவை ஒருவரிடம் கொடுத்ததாகவும், இந்த நபர் வைத்தியசாலையில் கடமையாற்றுவதாகவும் பணம் கொடுத்து பல மாதங்களாகியும் வேலை கிடைக்கவில்லை என்றும் மோசடி செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பல தடவை கொழும்புக்கு வருமாறு அழைத்து இதன் மூலம் மேலும் இரண்டாயிரம் ரூபாவை தாம் இழந்ததாகவும் மொத்தமாக பதின் எண்ணுயிரம் ரூபாவையும் இவரிடமிருந்து பெற்றுத் தருமாறும் தமது மனுவில் திரு. மாசிலாமணி கோரியுள்ளார்.

## நெறியாளர் குழு

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினர்களாக பின்வருவோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்,

திரு. நா. பாலச்சந்திரன்' திரு. கே. தனபாலன், திரு, ச. தெப்பியாஸ், திரு. க. பாலசுப்பிரமணியம், திரு. வை. கனகலிங்கம், செல்வன் க. தனராஜா, டாக்டர் ஐ. கந்தையா.

# சைவப்பணிகளுக்கு நிதி வழங்குவீர்!

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் பிரதேச இந்து சமய விருத்தி தர்மகர்த்தாக்கள் சபை, தனது சைவப் பணிகளைத் தொடர்ந்து சிறப்பாக நடத்துவதற்கு மூல நிதியாக ஒரு லட்சம் ரூபாவைத் திரட்டுவதற்கு உத்தேசித்துள்ளது. ஏற்கனவே 60 ஆயிரம் ரூபா மூல நிதியாகத் திரட்டப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டே தர்ம காரியங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்நிதிக்குச் சைவமக்கள் மனமுவந்து தாராளமாக நிதி வழங்கவேண்டுமென மேற்படி சபையின் தலைவர் முதலியார் வை. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தேசிய

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தலைவர் திரு. சு. நடராசா பதவிப் பொறுப்பேற்ற நாள்முதல்தமது காரில்' நந்திக்கொடி' பறக்கவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நந்திக்கொடித் தீர்மானத்திற்கு நிறைய ஆதரவு இருந்து வருவதும், தமிழரசுக் கட்சிக்காலத்தில் இகொடி பல சந்தர்ப்பங்களில்பாவிக்கப்பட்டதும்குறிப்பிடத்தக்கது. [வண். அ]

விவசாயப் பாடசாலையில்

## பாரதி நூற்றுண்டுவிழா

(திருநெல்வேலி)

திருநெல்வேலி விவசாய — கால் நடைப்பகுதி இலக்கிய வட்டம் இன்று திங்கட்கிழமை மாலை பராதி நூற்றுண்டு விழாவைக் கொண்டாடவிருக்கிறது.

திருநெல்வேலி விவசாயப் பாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி விழாவில் பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் கருத்தரங்கும், கவிஞர் முருகையன் தலைமையில் கவியரங்கும், விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா தலைமையில் விவாத அரங்கும் நடைபெறவுள்ளன. விழாவில் விவசாயப் பாடசாலை மாணவிகள் பாடல்களைப் பாடுவர். (கி)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. கந்தையா சுந்தரலிங்கமும்
2. கமலாவதியும், இருவரும் 'வாசா வாசா'

—வழக்காளிகள்

இல: MB / 1163

எதிராக

நாகமுத்து சதாசிவம் கைம்பெண் நல்லம்மா, உவைமன் வீதிச் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தற்போது கச்சாய் வீதி. கொடிகாமம்.

—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/1163ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்ஞல் விபரிக்கப்படும் துண்டுக் காணிகள் 1982ம் ஆண்டு மார்ச் மாதம்16ம் திகதி (16—03—1982) முற்பகல் 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்ஞல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 16,126/55ம் 3—5—1979 தொடக்கம் 10—12—1980 வரைக்கும் ரூபா 10,000க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 935/90½.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி கச்சாய்க் கோவிற்பற்று சன்ருப் போக்கடி இறை ''நாவலடி'' நில பர. 19 1/4. எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு கச்சாய் ஊரெல்லையும் வல்லிபுரம் பெண் பொன்னம்மாவின் ஆதனமும் தெற்கு வல்லிபுரம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதடங்கலும். எண் 300/280.

2. மேற்படி கச்சாய் இறை ''இலுப்பையடி'' நில பர. 12ம் எல்லை கிழக்கும் தெற்கும் கார்த்திகேசு மகள் நாகம்மாவின் ஆதனம், வடக்கு சின்னத்தம்பி பெண் தங்கத்தின் ஆதனம், மேற்கு செல்லையா கைம்பெண் சரஸ்வதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும் எண் 303/281

3. மேற்படி கச்சாய் இறை ''பஞ்சமி வளவு'' நில. பர 12½ எல்லை கிழக்கு துரைச்சாமி பெண் பொன்னம்மாவின்ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு சின்னக்குட்டி கந்தரின் ஆதனம். இதடங்கலும். எண் 300/285

க. சிவஸ்கந்தா

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

விலைமதிப்பாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை
13—02—82. 2414

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
Michael Caine Omarsharif
**Ashanti**
Adults—Action—Color

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
1—3—82 வரை
ஆதிபராசக்தி

ஸ்ரீதர் கடைசி வாரம்
யாழ். நகர் தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45 7—00: 9—30
CHRISTOPHER LEE, PETER CUSHING
'Horror Express'
Action, Suspense Thrill, Terror — Adults
Soon! "THE INCREDIBLE MELTINGMAN"

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Mean Machine

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—30, 6—30, 9—30
ஜெய்சங்கர்
கே. ஆர்.விஜயா
வாயாடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
1.3.82—2.3.82
THIEF OF BAGDAD
3.3.82—4.3.82 BLACK SUNDAY
5.3.82—7.3.82 MIGHTY HIMALAYAN MAN

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும் வெள்ளி விழா சித்திரம்.
பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்) (இளமை—சுகம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30, 6—30, 9—30 நான்குகாட்சிகள்
பெண்களின் ஏகோபித்த பாராட்டுகளுடன் காட்சியளிக்கிறது.
மூன்றாவது மகளிர் வாரம்
விஜயன்
சுருளிராஜன்
சத்தியகலா
இசை: சங்கர்—கணேஷ்
தனிமரம்
டைரக்ஷன் துரை
கலர்

## தவக்கால நற்சிந்தனை



உனக்கு ஆஸ்தி உண்டானால் அவைகளைப்பற்றியாவது, செல்வாக்குள்ள சிநேகிதரைப் பற்றியாவது பெருமை கொள்ளாதே; ஆனால் சகலமும் தந்தருளுகிறவரும், சகலத்திற்கும் மேலாகத் தம்மைத்தாமே கொடுக்க விரும்புகிறவருமான சர்வேசுரனைப் பற்றி மகிமைகொள். உன் சரீர வலிமையை அல்லது சவுந்தரியத்தைப் பற்றிக் கர்வம் கொள்ளாதே; ஏனெனில் அது சொற்ப நோயால் கெட்டு அசுத்தமாகும். இயல்பாய் உனக்குண்டான எந்த நன்மையும் சர்வேசுரனிடமிருந்து வருகிறது; ஆதலால் அவருக்கு உன்மேல் வெறுப்புண்டாகாதபடி உன் சாமர்த்தியத்தை அல்லது புத்திக்கூர்மையைப் பற்றி உன்னைத்தானே பாராட்டாதே.

(கிறீஸ்துநாதர் அநுசாரம்)

மானிப்பாய்

## கல்வி வட்டாரப் போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கல்வி வட்டாரப்பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. வட்டாரக் கல்விஅதிகாரி திரு.எஸ்.தனஞ்சயன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் மானிப்பாய் கல்விவட்டாரத்திலுள்ள 14பாடசாலைகள் கலந்துகொள்கின்றன.

## நியமனம்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிருத்திசபை கொக்குவில் உப பணிமனையின் நிர்வாக மேற்பார்வையாளராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ச. சபாபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கொக்குவில் கிராம சபை விசேட ஆணையாளராகக் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்வாக மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய யாழ்ப்பாணம் வீடமைப்புத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. க. வாமதேவன் மன்னார் அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பழையமாணவர் தினம் கொண்டாடுவர்

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் பழைய மாணவர்தினம் கொண்டாடப்படவுள்ளது. பழையமாணவர் சங்கநிர்வாக சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர் திரு. ச. சபாலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் பழையமாணவர்தினம் கொண்டாடுவதன் மூலம் பாடசாலைக்கும் பழைய மாணவர்களுக்குமிடையே உறற தொடர்பை வளர்க்கக் கூடியதாக இருக்கும் என்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கு இது உதவியாக இருக்கும் என்றும் பலராலும் கூறப்பட்டது.

இதற்காகப்பழைய மாணவர் பட்டியல் ஒன்றை தயாரிப்பது என்றும் அதற்கான ஒத்துழைப்பைபழைய மாணவர்களிடமிருந்து பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(அ)

## "உடற்கல்வியைப் பெற விளையாட்டுக்கள் அவசியம்"

(சாவகச்சேரி)

"பாடசாலையில் வகுப்பில் பெறும் கல்வியினால் மனோதைரியத்தைப் பெறலாம். ஆனால் உடற் தைரியத்தைப் பெறுவதற்கு இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் இன்றியமையாதன. மனோதைரியத்தைப் பெறுவதற்குக்கூட உடற்பலம் அத்தியாவசியம். உடற்பயிற்சியில் திறமையான முறையில் பங்குபற்றிய மாணவர்களையும், அவர்களைத் தயார் செய்த ஆசிரியர்களையும் நான் பாராட்டுகின்றேன்."

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடந்த சாவகச்சேரிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய யாழ். மாவட்ட உடற்பயிற்சிக் கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி உட்பட 12 மகாவித்தியாலயங்கள் இப்போட்டியில் பங்குபற்றின.

பிரதம விருந்தினர் கொடியேற்றி அணிவகுப்பு மரியாதையையேற்ற பின்னர் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா தலைமையில் நடந்த வைபவத்தில் தொடர்ந்து திரு. தங்கராசா உரையாற்றுகையில் கூறியதாவது:— விளையாட்டுப் போட்டியில் அனைவரும் வெற்றியடைய முடியாது. இன்று வென்றவர் நாளை தோற்கலாம், இன்று தோற்றவர் நாளை வெல்லலாம். வெற்றியும் தோல்வியும் சகஜம். எனவே தோற்றவர்கள் மனச்சோர்வடையாமலும், வென்றவர்கள் மமதை அடையாமலும் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்" என்றார்.

பௌதிக, ரசாயனப் பொருட்கள்

## கொள்ளையடிக்கப்பட்டதால் மாணவர் கல்வி பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

கடந்த டிசம்பர் மாதத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடம் உடைக்கப்பட்டு, அங்குள்ள ரசாயனப் பொருட்கள், பௌதிக உபகரணங்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டதையடுத்து இங்குள்ள உயர் வகுப்பு மாணவர்களின் விஞ்ஞானக்கல்வி ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் 21ந் திகதி இரவு நடைபெற்ற ரசாயனப் பொருட்கள் கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து களவாடப்பட்ட ரசாயனப்பொருட்களுக்குப் பதிலாக மாற்று ரசாயனப் பொருட்களையும் மற்றும் விஞ்ஞானக் கல்விக்கு அத்தியாவசியமான உபகரணங்களையும் அனுப்பி வைக்குமாறு கல்லூரி நிர்வாகம் வடமாநிலக் கல்விப் பணிப்பாளருக்கு ஊடாகக் கல்வி அமைச்சைக் கேட்டிருந்தது. ஆனால் இதுவரை அந்த ரசாயனப் பொருட்கள் எதனையும் கல்வித் திணைக்களம் இக்கல்லூரிக்கு அனுப்பிவைக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் க. பொ. த. உயர் வகுப்பு மாணவர்கள் உட்பட விஞ்ஞானப் பாடங்களைக் கற்கும் மாணவர்கள் தங்களது விஞ்ஞானப் பாடங்களைத் தொடர்ந்து படிக்கமுடியாது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் திரு. எஸ். ரி. சாரி கவலை தெரிவித்தார்.

## அறுவர் கொலைவழக்கு இன்று விசாரணை

(புலோலி)

கம்பர் மலை பயங்கர துப்பாக்கிச்சூட்டுஅறுவர்கொலைவழக்கு விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும்.

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச்சேர்ந்த கந்தையா அழகம்மா, நாராயணசாமிஅழகம்மா, நாராயணசாமி கருணேஸ்வரன், நாராயணசாமி சாந்தேஸ்வரன்யோகானந்தன் ஜெயநாயகவதி, வே. யோகானந்தன் ஆகிய அறுவரையும் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த இ. அப்புத்துரை. வே. மகேந்திரன், இ. துரைராசா, இ. தேவராசா, இ. தங்கராசா, சி. தில்லைநடராசா ஆகிய அறுவர்மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அப்புத்துரை, துரைராசா தேவராசா ஆகிய மூன்று எதிரிகளும் விளக்கமறியலிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டபோது கொலை செய்யப்பட்டனர். ஏனைய மூன்று எதிரிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலைவழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சிகள் சமூகமளிக்காதபடியினால் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தடுப்பூசி

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நெல்லியடி உப அலுவலகப் பகுதியில் நாய்களுக்கு விசர் நோய் ஏற்படாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை நெல்லியடி சுகாதரப் பரிசோதகர் திரு. அ. அ. றொபேட்ஸ் மேற்கொண்டுள்ளார் இதனைத்தொடர்ந்து இப்பகுதியில் உள்ள நாய்களுக்கு இன்றும் நாளையும் விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

## தலைவராகத் தெரிவு

(புலோலி)

புலோலி தெற்கு பல்லப்பையைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை கதிர்காமலிங்கம் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப் பலநோக்குக் கூட்டுறவுச சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினராகப் பல தடவைகள் தெரிவுசெய்யப்பட்ட இவர் புற்றளை மகாவித்தியாலயம், புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயம் என்பவற்றின் மழையமாணவருமாவார்.

இயக்குநர் சபையின் உபதலைவராகத் திரு. வ. கதிர்காமுவும் தெரிவுசெய்யப்பட்டார்.

## குருபூசை

கோண்டாவில் சுவாமி கந்தையா (குடைசுவாமி) வின் குருபூசை இன்று 1—3—82 திங்கட்கிழமை நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் பங்குகொள்ளவும். 2429

---

இலங்கை சதுரங்க சம்மேளன
### சதுரங்கப்போட்டி

ஆரம்பம்: 06—03—1982. மேலதிக விபரங்களுக்கு பி. ப. 3.00—6.00 வரை. கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

வை. கணேசலிங்கம்
(161) 49, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 2428

---

கொக்குவில் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்துக்கு எமது கல்லூரி பழைய மாணவர்கள் தங்களது விபரங்களைத் தந்துதவுமாறுவேண்டுகிறோம். விபரங்களை மார்ச்சு மாதம் 15 ம் திகதிக்கு முன்பு பின்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்
2400

---

## நினைவாஞ்சலி

அக்குவையனஸ் சர்வகலாசாலை
கணக்கியல் மாணவன்
### வசந்தகுமார் இராசலிங்கம்
உலகில் உதித்த தினம்: 2-4-49
கந்தன் கழலடிகளில் தெய்வீகம் பெற்றதினம்
1-3-1973

காசிவிசாலாக்ஷிசமேத காசிவிஸ்வநாதனால் ஆட்கொள்ளப்பட்டு நல்லைக்கந்தன் திருவடித்தாமரைகளில் இன்று ஒன்பது ஆண்டுகள் நிறைவெய்தி மகிழும் எங்கள் உயிரே மைந்தா! எங்கள் உணர்வே அண்ணா! அறிவொளி நிறைந்த நின் இதயத்தின் அமுத அன்பை அருளொளி வீசும் கண்களால் காட்டி அள்ளிக்கொடுக்கும் அருமைத் திருக்கரங்களால் எம்மை அணைத்து எங்கள் உலகமே நீயென்பாயே! நின் திருவடித் தாமரைகளைப் பக்தியுடன் வணங்கிநிற்கின்றோம். காத்தருள் பொழிவாயப்பா.

உன்னையே நம்பிவாழும்
அப்பா, அம்மா, தங்கைகள் பொபி, ரூபி,
கொழும்பு பெரியம்மா. 2423

---

கிராமிய தொழில்துறை
அமைச்சு வழங்கிய
## 3 பயிற்சி நெறிகள்

### மரவேலைப் பயிற்சி, காந்திக் கிராமம் கிளிநொச்சி

15 க்குமேல் 30 வயதுவரை ஆண்கள் சாதாரண கல்வி அறிவுடன் விண்ணப்பிக்கலாம். விடுதி வசதி உண்டு. படிச்செலவும் உற்பத்தியில் 80 வீத லாபமும் வழங்கப்படும். சான்றிதழ்கள் தரப்படும். உதவியாக விவசாயப் பயிற்சியும் உண்டு. சமீபத்தில் கௌரவ கிராமிய தொழில்துறை அமைச்சர் ஆரம்பித்துவைப்பார்.

● ● ●

### அலங்கார நெசவுவேலை அன்னை கஸ்தூரிபாய் இல்லம் தருமபுரம்

15 க்கு மேல் 30 வயதுவரை பெண்கள் சாதாரண கல்வி அறிவுடன் விண்ணப்பிக்கலாம். விடுதிவசதி உண்டு. வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

● ● ●

### தென்னம்தும்பு பதனிடும் பயிற்சி, காந்திய நிலையம், உருத்திரபுரம்

15 க்கு மேல் 30 வயதுவரை ஆண், பெண் இருபாலாரும் சாதாரண கல்வி அறிவுடன் விண்ணப்பிக்கலாம், ஆண்களுக்கு விடுதிவசதி உண்டு. இந்த வருட நடுப்பகுதியில் ஆரம்பமாகும்.

### கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள் பயிற்சி காந்திக்கிராமம் மதுரை

20 வயதுக்குமேல் 30 வயதுவரை உயர்தரகல்வி அறிவுடன் தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கலாம். விடுதி வசதிச்சலுகை உண்டு. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுத் தெரிவுசெய்யப்படும்.

கௌரவ பொதுச் செயலாளர்
அகில இலங்கை காந்திசேவா சங்கம்
காந்திநிலையம், உருத்திரபுரம்.
தந்தி: 'காந்தீயம்', கிளிநொச்சி. 2427

---

### 6-வது நினைவு தினம்



செல்வன் ஸ்ரீ பத்மநாதன்

'ஆற்றொணு துயரில் எம்மை
ஆழ்த்தி பிரிந்து இன்று
ஆண்டுகள் ஆறு ஓடி
விட்டதடா பத்ம நாதா
அன்பழகா நினைத் தேடி
நாமலைந்த தூரம் என்னே
அன்னவன் காலன் தானே
உனை இழுத்துச் சென்றான்'

உன் மறைவால் வாடித் தவிக்கும் அம்மா, குவைத்தில் இருக்கும் அண்ணா, அண்ணி, பிள்ளைகள் இன்று உனை நினைந்து அஞ்சலி செலுத்துகிறோம். 2425

---

## ஏலவிற்பனை

பழமைவாய்ந்த அலுமாரிகள், கார் உதிரிப்பாகங்கள், ரயர்கள், தண்ணீர்த்தொட்டிகள், தண்ணீர்த் தாங்கிகள் இன்னும் பலவித தளபாடங்கள் என்பன எதிர்வரும் 1982—03—10ம் திகதி புதன் கிழமை காலை 10—00 மணியளவில் பழைய பூங்கா வளவில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இப்பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் செயலக கட்டிட மேற்பார்வையாளருடன் தொடர்புகொள்ளவும்.

கேள்விதாரர்கள் கேள்வித் தொகையை உடனடியாகச் செலுத்திப் பொருட்களை அப்புறப்படுத்தல்வேண்டும்.

சி. சிவகுருநாதன்,
நிர்வாக உத்தியோகத்தர்
காரியாலய உதவியாளர்,
யாழ். மாவட்ட
அரசாங்க அதிபருக்காக,
செயலகம்,
யாழ்ப்பாணம். 2415

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்
### கிளிநொச்சிப் பிராந்தியம்

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரசபையின் தலைவரினால் கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரம் அனுப்புதற்கு நீர்பாசனத் திணைக்களத்தில் ரூபா 250,000 க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்கு பதிவு செய்யப்பட்ட அல்லது வேறு அரச திணைக்களங்களில் ரூபா 700,000/-க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டுமே தகுதி உடையோராவர்.

### வேலை விபரம்

"திக்காய் குளத்திற்கு அணைக்கட்டு அமைத்தல் (புனரமைப்பு வேலை)'

கேள்விப்பத்திரங்கள் 15. 3. 82 தொடக்கம் 26. 3. 82 வரை வழங்கப்படும் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்த வேண்டும் கேள்விப் பத்திரங்கள் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

க. குமாரசுவாமி
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
2392 கிளிநொச்சி

---

# வரி விளம்பரம்

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனான வீடு ஒத்திக்கும், வாடகைக்கும் உண்டு. தொடர்பு: சுபத்திரா தேவி, 870, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2404

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி மேற்கு காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தப்புவின் மரண சாதனமில்லாச் சொத்துக்கள் சம்பந்தமாக.

காலஞ் சென்றவர் கந்தப்பு கைம்பெண் வள்ளியம்மை "கலாபவனம்" கலட்டி கரவெட்டி மேற்கு.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல 1134/T

எதிராக

1. கந்தப்பு வல்லிபுரம்
2. ஆழ்வார் கணபதிப் பிள்ளை தம்பையா
3. பெண் மகேஸ்வரி
4. வேலாயுதம் விஸ்வேஸ்வரராசா
5. பெண் பொன்மலர்
6. பாலசிங்கம் இராசேந்திரா
7. பெண் புஷ்பமலர்
8. சர்வானந்தா பெண் சிந்தாமணி கரவெட்டி மேற்கு

பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேற்குறித்த இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ள தென இத்தால் அறிவிக்கப்படுகிறது. அக்கறையுள்ள ஆள் எவரும் 1982—ம் ஆண்டு சித்திரை மீ 2 திகதி முற்பகல் 9—00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகா தென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

நீதிமன்றின் கட்டளைப்படி
பதிவாளர்

1982 - ம் ஆண்டு மாசி மாதம் 11—ம் திகதி வரைவு

**வ.மகாலிங்கம்**
மனுதாரின் சட்டத்தரணி
2413

### பயிற்சி

பின்வரும் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்புகள் 1—3—82 காலை 8—30 மணிக்கு ஆரம்பமாகின்றன. Radio officers (P. M, G) Ship, Radio and Television, Electric wiring, Hotel management, சான்றிதழ்கள் வழங்கப்படும். K G's Institute, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(2408)

### வகுப்பு

Chartered prelim 1982 தமிழ் மூல வகுப்புகள் 1—3—82 பிற்பகல் 2—00 மணிக்கு ஆரம்பமாகின்றன K. G's Instiue, 37, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(2409)

### விற்பனைக்கு

உடுவில் மெயின் வீதியில் மருதனுமடச் சந்தியில் இருந்து 150 யார் தொலைவில் இராமநாதன் கல்லூரிக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்குமிடையில் சச்சதுரமான 3½ பரப்புடைய நல்ல காணி விற்பனைக்குண்டு. தரகர் இல்லாத கூடிய விலை கொடுத்து வேண்டத்தக்க கண்ணியமானவர்கள் தொடர்பு கொள்ளவும். திருமதி பொ. நேசம்மா, வல்லை வீதி, சங்கானை.

(2420)

வொக்சோல் விக்ரர் 2 ஸ்ரீ 3157 வொக்சோல் வெலொக்ஸ் EN 557 உம் நல்ல வெட்போர்ட், வொக்சோல் என்ஜின்களும் உண்டு. நேரில் வரவும். ஓட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2422

நல்ல நிலையிலுள்ள CN தொடர் A 40 விற்பனைக்குண்டு. க. செல்வராசா, நாவலர் மடத்தடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.
2426

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

## வெற்றி தோல்வியில்லை

[அரியாலை]

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடிய பொழுது எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய என். சிறீதரன், கே. மகேந்திரகுமார், கே. சுகுணகுமார் ஆகியோர் முறையே 87, 41, 25, ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய ஈ. ஜோர்ஜ் 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், ஆர். ஸ்கந்தராசா 50 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும், எஸ். பகீரதன் 69 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து விளையாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியைச் சேர்ந்த எஸ். பகீரதன், எஸ். ஜெயசீலன் ஆகியோர் முறையே 52, 32 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயகாந்தன் வெளியேறாமலே 32 ஓட்டங்களைப் பெற்றார். நேரம் முடிவடைந்ததால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

## விளையாட்டுப் போட்டி

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவை அலுவலர் பகுதிகளுக்குள் இருக்கும் விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், பொது மன்றங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி ஒன்றினை நடாத்த வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு. சு. கனகராசா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில்

# நோயாளிகள் அதிகரிப்பதனால் சுகாதாரத்தைப் பேணவேண்டும்

## வைத்திய கலாநிதி மாணிக்கம் உரை

(யாழ்ப்பாணம்)

"'பொதுமக்களின் நன்மைக்காக, இதனை உங்கள் வைத்தியசாலை எனக்கருதி அபிவிருத்தி செய்ய வேண்டும். வைத்தியசாலையை சுகாதாரமாகவைத்து பேணவேண்டும்'

யாழ் ஆஸ்பத்திரியில் மனநோயாளர் உணவு உட்கொள்ளும் அறையை திறந்துவைத்துப்பேசிய வைத்திய கலாநிதி திரு. மாணிக்கம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். 'ரஞ்சனாஸ்' 'சீமாட்டி' ஆகிய இரு புடவை வர்த்தக நிறுவனத்தினரால் பல ஆயிரம் ரூபா செலவில் இவ் வுணவு உட்கொள்ளும் அறை நவீன மயமாக்கப்பட்டிருந்தது.

யாழ். ஆஸ்பத்திரி அதிபர் வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தலைமையில் இத் திறப்புவிழா நடைபெற்றது.

வைத்திய கலாநிதி திரு. மாணிக்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

### நோயாளிகள் அதிகரிப்பு

''சனத்தொகைஅதிகரித்துக்கொண்டு போவதால் நோயாளரின் தொகையும் அதிகரிக்கிறது. ஆதலால் வைத்தியசாலைகளை சுகாதாரமாக வைத்துப்பேணவேண்டும்,பணவசதி படைத்தவர்கள் இந்த ஆஸ்பத்திரியின் அபிவிருத்தி வேலைகளுக்கு தாராளமனதுடன் உதவ வேண்டும்.''

லயன்ஸ், ரோட்டரிக்கழகங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு செய்து கொண்ட உதவிகளைப் பாராட்டிய வைத்திய கலாநிதி திரு. மாணிக்கம் இம்முறை பொதுங்களும் இது போனற உதவிகள் செய்ய முன்வந்துள் ளமையையும் பாராட்டினார்.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிபர் வைத்தியகலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன் தமது தலைமையுரையினி தெரிவித்ததாவது:

''யாழ். ஆஸ்பத்திரியில் பல குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்ய பொதுமக்களும், பொதுஸ்தாபனங்களும் முன்வரவேண்டும்.

''இவ்வைத்தியசாலை அபிவிருத்திசபை பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு வரும் அதேவேளையில், இதற்கு ஒத்துழைப்பளித்து வரும் இவ்வைத்தியசாலை மேற்பார்வையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்.''

ஆஸ்பத்திரி பதில் மேற்பார்வையாளர் திரு. எஸ். செல்லத்துரை, யாழ்மாவட்டத்திலுள்ள தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்கங்கள் தலா 1000 ரூபா வீதம் ஆஸ்பத்திரி அபிவிருத்திசபைக்கு வழங்குவதற்கு முன்வந்ததென்றும் எனக்குக் கீழ் இயங்கும் தெ. ப. உ. வி. கூ. சங்கம் 5000 ரூபா அன்பளிப்பாக வழங்கியுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

யேற்பார்வையகளர் திரு. எஸ். திலகர் நன்றி தெரிவித்துப் பேசுகையில், ஆஸ்பத்திரியில் நிலவும் சீர்கேடுகளுக்கு ஊழியர்களின் கவலையீனமும் ஒருகாரணம் என்று குறிப்பிட்டார்.

ஆஸ்பத்திரி அபிவிருத்தி வேலைகளுக்கு உதவி புரியும் ஸ்தாபனங்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், பொது மக்களுக்கும் நன்றி தெரிவித்தார். (மா)

## குடைச்சுவாமி குரு பூசை

(யாழ்ப்பாணம்)

குடைச்சுவாமி என வழங்கும் கொண்டாவில்கந்தையாச் சுவாமிகள் குருபூசை இன்று திங்கட்கிழமை காலை கொண்டாவிலில் உள்ள சுவாமிகளின் சமாதி இல்லத்தில் நடைபெறுகிறது.

நண்பகல் மாகேசுர பூசை இடம்பெறும் (அ)

## இயக்குனர் சபை உறுப்பினர்

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை அங்கத்தவர் தெரிவு அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் இயக்குநர்சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. வே. கதிர்காமலிங்கம், திரு. வ. கதிர்காமு, திரு. ப. கிருஷ்ணபிள்ளை, திரு. ஆ. நடராசா, திரு. இ. சீவரத்தினம், திரு இ. கிருஷ்ணராசா, திரு. இ. பூரணச்சந்திரன். (க)

தன்ஸானிய விமானக் கடத்தல்:

## விமானத்தை தகர்க்க முயற்சி நடந்ததாம்

லண்டன் பெப், 28

லண்டனிலுள்ள சிறிய விமான நிலையமொன்றில் தன்ஸானிய விமானமொன்றில் கடத்தல்காரர்களினுல் 100 பேர் பயணம் வைக்கப்பட்டுள்ளனர்.

தன்ஸானிய ஜனுதிபதி திரு. நைரேரியை ராஜினுமா செய்யுமாறு கோரியே பிரயாணிகளை பயணம் வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கடத்தல்காரர்கள் கைத்துப்பாக்கி, குண்டுகளுடன் விமானத்தை காவல் புரிந்து வருகின்றனர்.

பணயக்கைதிகள் மீட்கபிரிட்டனின் பொலிஸ் வாகனமொன்று விமானத்திற்கு அருகில் செல்ல முற்பட்டபோது கடத்தல்காரர்கள் விமானத்தை தகர்க்க முயன்றதாகவும் கூறப்பட்டது.

கடத்தல்காரர்களுடன்பிரிட்டனிலுள்ள தன்ஸானியத் தூதுவரும், பிரிட்டஷ் அதிகரிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

பணயக் கைதிகளை மீட்க திடீர்த்தாக்குதல நடத்தும் நோக்கமில்லை' என்று பிரிட்டிஷ் பொலிசார் தெரிவித்துள்ளனர். (வெ)

வவனியா, மன்னுர், முல்லைத்தீவு

## விசேட சேவை அலுவலர் நியமனத்தில் சிக்கல்?

(யாழ்ப்பாணம்)

வவனியா, மன்னுர், முல்லைத்தீவுமாவட்டங்களில்விசேச சேவை அலுவலர் நியமனத்தால் அரசுக்குத் தலையிடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஐம்பதுக்கம்பது வீதம் வீசேட சேவை அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று இப்பகுதி ஐ. தே. கட்சி அங்கத்தவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனர்

த வி. கூட்டணியினர்யாழ்ப்பாண மாவட்டத்துககு வழங்கியது போல் முழுக்க தங்கள் கட்சிக்காரரே நியமிக்கவேண்டுமென்று அரசை வற்புறுத்தியுள்னார்கள்.

இந்த பிரச்னை சம்பந்தமாக இன்றுகாலை த. வி, கூ. தலைவர்கள் ஜனுபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிகிறது (மா)

## "இலங்கை வேந்தன்" இசை நாடகம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி கிருஷ்ணன் கலைமன்ற ஆதரவில் இலங்கை திரைப்பட, வானொலிபுகழ் கலைஞர்கள் பங்குபற்றும் ''இலங்கை வேந்தன்'' இசை நடன நாடகம். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமைநடைபெறும்.

## ஆயுதப்படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து நேற்று அதிகாலை தேடுதல் வேட்டையில் இறங்கினர் ஹெலிக்கோப்டர் தாழப் பறந்து இவர்களின் தேடுதல் நடவடிக்கைகளுக்கு உதவியது

தேடுதல் வேட்டையின் போது 24 வயதுள்ள கறுத்தான் என்று அழைக்கப்படும் கிருஷ்ணசாமி கிருஷ்ணகுமார் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இறந்தவரின் வீட்டை ஆயுதப்படையினர்சோதனையிட்ட போது அங்கு றைபிள்கள் துவக்குகள் தோட்டாக்கள், தூரம்பார்க்கும் கண்ணுடி கெற்புகள் டைனமைற் முதலியன இருந்தனவாம்.

வடபகுதி வன்செயல்களுடன் இறந்தவருக்கு தொடர்பிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமான ஆயுதங்களாக இருக்கலாம் என்றும் பொலிஸ் வட்டாரத்தில் நம்பப்படுகிறது,

இச்சம்பவத்தைத் தொடர்ந்து விசேஷ விமானமூலம், பொலிமா அதிபர் ஸ்தலத்திற்கு வுஜயம் செய்தார்

இளைஞரின் சடலம் ஆஸ்பத்திரிச்சவக்சாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்கான ஏற்பாட்டைப் பொலிஸார் செய்துள்ளனர்.

2,700 சுருட்டுகளுடன்

## சுருட்டுப்பெட்டி கொள்ளை சந்தேகநபர் தலைமறைவு

(மாவிட்டபுரம்)

வீதியால் கொண்டுசெல்லப்பட்ட சுருட்டுப்பெட்டியைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டாராம் நபர் ஒருவர். அவரைத்தேடிப் பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

சுன்னுகத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை மெய்யழகன் என்பவர் 2700 சுருட்டுகள் அடங்கிய சுருட்டுப் பெட்டியொன்றை சுன்னுகத்திலிருந்து சண்டிலிப்பாய்க்கு எடுத்துச்சென்ற சமயம் இச் சம்பவம் நடந்தது.

அவரை வழிமறித்த நபர் அவரை பயமுறித்தி சுருட்டுப் பெட்டியை கொள்ளையடித்துக் கொண்டு சென்ருராம்.

இதுபற்றிக் காங்கேசன் துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டதை யடுத்து சந்தேகநபரான எஸ். தியாகராசாவைத் தேடிவருகின்றனர். (க)

## சந்தேக நபர்களை சாட்சி அடையாளம் காட்டினர்

(புலோலி)

புலோலி தெற்கு கணேசராசா கத்திவெட்டு சந்தேக நபர்கள் இருவரும் சாட்சியினுல் அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காட்டப்பட்டனர்.

புலோலி தெற்கைச்சேர்ந்த வல்லிபுரம் கணேசராசா என்பவர் பருத்தித்துறைப் பொலிஸில். சம்பவதினம் தான் மந்திகைச் சந்தைக்குஅருகாமையிலுள்ள தனது கடையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தபோது பெயர் தெரியாத ஒருவர் தம்பையா என்பவருக்கு தனதுகடையின் முன்னுல் வைத்து அடித்ததைக்கண்டு உடனேதான் அங்கு சென்று இருவரையும் விலக்குப்படித்து விட்டதாகவும், பின்பு பிற்பகல் தனது கடையின்முன் உள்ள மதகில் இருக்கும்பேபது முன்பு தம்பையாவுடன் சண்டைபிடித்த நபர் தடியுடன்வந்து தனக்கு ஓங்கி அடித்ததாகவும் தான் எழுந்து அதைத் தடைசெய்ய முயற்சித்தபோது அவருடன் வந்த மற்றவர் தனக்குப்பாளைக்கத்தியால் முதுகிலும், கமக்கட்டிலும் வெட்டியதாகவும்சந்தேக நபர்களைக்கண்டால் அடையாளம் காட்டமுடியும் என்றும் சந்தேகநபர்களின் பெயர்கள் தெரியாதென்றும் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்திருந்தார்.

இக் கத்திக்குத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி .இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி புலோலி தெற்கைச்சேர்ந்த அப்பன் சத்திரன், அப்பன் இராசன் ஆகிய இரு சந்தேக நபர்களையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர் இச்சம்பவத்தின் போது பாவிககப்பட்டதாகக் கருதப்படும் பாளைக்கத்தியொன்றையும் சைக்கிள் ஒன்றையும் பொலிசார் ஏற்கனவே மீட்டிருந்தனர்.

நீதவான் சந்தேக நபர்கள் இருவரையும் அடையாள அணிவகுப்புக் குட்படுத்துமாறும் அதுவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

சந்தேக நபர்கள் இருவருக்குமான அடையாள அணிவகுப்பு பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதவான திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. 1—ம் சாட்சியான கணேசராசா சந்தேக நபர்கள் எவரையும் அடையாளம் காட்டவில்லை. 2—ம் சாட்சியான சரவணபவன் இரண்டு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டினர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் இருவரும் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில்ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர்கள் இருவரையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினுர். வழக்கு இம் மாதம் 23ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## கிரிக்கட்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டது.

காலநிலை பாதகமாகஇருப்பதாகவே பாகிஸ்தான் வானிலை அவதான நிலையமும் அறிவித்துள்ளது.

கண்கவர் நவீன வீட்டுத் தளபாடங்களுக்கு
டில்கா பேணிச்சர் பலெஸ்
234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8186
வாடிக்கையாளர்களுக்கு பல சலுகைகள்!!

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் மார்ச் மீ 1-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News-Paper. The General P.O..Sri Lanka Regd. Q.B.10023ω/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி 7707, 389, 8186.